# கிழக்கில் வெளுக்காத வழக்கு!

அக்கரையூர்
மு. தாஹா

LIBRARY
COLOMBO 7.
2017/2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் வெளுக்காத வழக்கு!

PUBLIC LIBRARY

அக்கரையூர்
மூ. ஞாகா

அகில இலங்கை இளைஞர் மன்றம்
பெரிய பள்ளிவாசல் வீதி
அக்கரைப்பற்று : : இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kilakkil Velukkatha Valakku

*(Free Verse)*

*By :*

**Mu. RUKA**

*First edition : January, 1991*

*Published by :*

ALL CEYLON YOUNG MEN'S FORUM
Grand Mosque Road
AKKARAIPATTU
Sri Lanka

40/-

*Cover Designed By :*

*A. M. THAJ*

*Printed at :*

TAJ PRESS
53. Nainiappan St.
MADRAS-600 001

894.8m
25595

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவு ... நூல்களைச்
சுத்தமா ... வும்
அடையாளங்கள் ... டுத்த
வேண்ட

# ஒரு நெருப்புப் பொறி மீது ஒரு நேயப் பார்வை

புதுக் கவிதை என்பது இன்னும் ஒரு புதிராகவே இருக்கிறது. காரணம், காலமாற்றத்தின் பிரதிபலிப்புகளை மரபுவாதிகள் எப்பொழுதுமே ஏற்றுக் கொள்வதில்லை. இதன் காரணம் ஒருவர் ஒன்றை உள்ளத்தாலும் உணர்வாலும் ஏற்றுக்கொண்டு அதனோடு சங்கமித்து விட்டால் மற்றொன்றில் புலப்படும் உண்மைகளும் அழகுகளும் புலனாவதில்லை. காலமாற்றம் என்பது காலத்தின் தவிர்க்க முடியாத தேவை. மக்களது மனோபாவங்களின் பிரதிபலிப்பு. ஆதலால் அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

புதுக்கவிதையில் என்னை மிகவும் கவர்ந்த அம்சம், பொருளும் உணர்வும் செறிந்து நிற்கும் அதன் இறுக்கமான மொழி நடை. நயமிகு நல்ல தமிழின் அழகிய பரிணாமம் அது. பொருள் புலப்பட சற்று தாமதமாகும், உயர்ந்த நகைச்சுவை போல, புலப்பட்டால் அது போன்ற நயமிகு வார்த்தை ஜாலங்களில் அப்படியே ஒன்றி விடுவோம். இதற்குக் காரணம், கவிஞன் தன் மன உணர்வுகளை எந்தக் கட்டுப்பாடுமின்றி தன் வசனக் கவசத்தில் நிரப்பி விடுகிறான். அவனுடைய சிந்தனா ஓட்டத்தின் அளவே வசனங்கள் நீளும்; குறுகும். சிலவேளை ஒரு சொல்லிலேயே ஒருவரி நிற்கும். இந்நூல் ஆசிரியர் அக்கரையூர் றூகா, இந்நூலில் கல்லறை வாசகங்கள் என்ற கவிதையில்,

எங்கள் அரசுகள்
செய்ய முடியாத ஒரு காரியத்தை
மரணம் எனக்குத் தந்துள்ளது
ஆம்! என் வீடு கல்வீடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார். ஒரு ஏழை ஒரு கல்வீட்டில் வாழ்தலாவது, அவன் மரணித்தபின் அடக்கப்படும் கல்லறையே என்பதை எவ்வளவு இலாவகமாகக் கூறுகிறார் ஆசிரியர். அது அரசு செய்ய முடியாதது என்று ஒரு சாடுதலும் செய்கிறார் இந்த விதமான சொல் நயங்களை ஒரு புதுக்கவிதையில் சொல்ல முடியும். ஆனால் நம் கவிஞர் றூகாவுக்கு அது சரிவரக் கைவரவில்லை என்று ஒரு ஏக்கம். அதுபற்றி அவர் வருந்துகிறார்.

வித்தகக் கவிஞன் கை தொட்டுவிட்டால்
விறகுக் கட்டைகூட
வீணையாகி விடும்
நான் தொடும் வீணை கூட
விறகாகி வீணாகிக் கொண்டிருக்கிறதே!

இந்த வருத்தம் அவர் மேலும் அமர கவிதைகளைச் செய்ய வேண்டுமென்ற அவாவினால் எழுந்தவையே யன்றி வேறில்லை 90, ஆகஸ்டு 6ல் வயலில் வேலை செய்து கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள் 52 பேர் துப்பாக்கி விருந்துக்கு இலக்காயினர். அவர்களுடைய ஜனாசாக்களை அக்கரைப்பற்று பட்டினப் பள்ளிவாயிலில் கொண்டு வந்து வைத்த காட்சியை,

ஒரு பட்டினப் பள்ளி வாயிலில்
கர்பலா கண் காட்சி
ஓவியங்கள் என்னவோ எங்களுடையதுதான்
ஓவியர்கள் தான் . . . ?

சொற் சித்திரங்கள் அமைந்துள்ள இந்த தத்ரூபமான காட்சி என்றும் நெஞ்சை விட்டகலாத உணர்வுப் பிளம்புகள். இந்த காட்சிக்கு கர்பலாவை உவமைதேடிக் கொடுத்த இவருடைய திறன் பாராட்டத் தகுந்ததே.

கவிஞர் றூகாவின் 'கிழக்கில் வெளுக்காத வழக்கு' கவிதைகள் அநேகம் அரசியல் சார்புடையவை. வேண்டுமென்றே தான் அவர் அரசியல் பாடினார் என்பதற்கில்லை. 1990,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் 11 முதல் வடகிழக்கு பிரதேசத்தில் ஒவ்வொரு நிமிடமும் பயங்கர அரசியல் தாக்கங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவருடைய மன நிலையும் நாட்டின் சூழ்நிலையும் அதுவாகவேயிருந்தது. அது மட்டுமல்ல, முஸ்லிம்கள் இதனால் பெரிதும் தாக்கப்பட்ட நிலை இவர் மனதை வெகுவாகத் தொட்டு நின்றதும் இதன் காரணங்களாகும்.

வசன கவிதை என்றாலும் புதிய புதிய உத்தி முறைகளைக் கையாண்டு இவர்தன் கவிதைக்கு சுவை சேர்த்திருக்கிறார். 'கிழக்கில் வெளுக்காத வழக்கு' என்ற தலைப்புக் கவிதையே ஒரு வழக்குமன்றக் காட்சியாகும், சாக்கடையும் சந்தனமும் ஒரு உரையாடல். மூன்று மூன்று அடிகளில் 'மொட்டுக்கள்' என்ற பெயரில் சொற்சித்திரங்கள், ஒரு ஜப்பானிய ஹைக்கூ இவ்விதம் சொல்லும் பாணியை விதம் விதமாக இவர் வகுத்துக் கொண்டிருப்பது, சுவையாகவும் உணர்வு பேதங்கள் தருவதாகவும் இருக்கிறது. 'சாக்கடையும் சந்தனமும்' என்ற கவிதையில் சுகந்த மணம் தரும் சந்தனம் கூறுவதைக் கேளுங்கள்:

"ம்... என்ன சொன்னாய்...
ஊரே உமிழும் எச்சில் படிக்கன்களே
நாங்கள் இந்திராவைக் கூட
எரித்து முடித்தவர்கள்..."

மங்கள வைபவங்களில் மணம் பரப்பும் சந்தனத்தின் இச் செயல் வீரமா? சாத்வீகமா? இன்றைய யதார்த்த நிலை எது என்பதை இங்கு உருவகப்படுத்துகிறார், கவிஞர் "காதலில் தொடங்கி கல்லறை வழியே!" என்ற கவிதையில் காதலன் காதலியிடம் ஒரு வார்த்தைக்காக யாசித்து நிற்கும் நிலையை அற்புதமான சொற்கோவை மூலம் சித்திரிக்கிறார்.

"ஒரேயொரு வார்த்தைக்காக நான் யாசித்தபோது
உன் அகராதி காலியாக இருந்தது
இப்போது நீ வார்த்தை வங்கியாக இருந்தும்
ஒரு வார்த்தைகூட கடன் தர மறுக்கிறாயே..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவிதைத் தொகுதிக்கு ஆசிரியர் என்னிடம் ஒரு அணிந்துரைதான் கேட்டார். நான் அதற்கு "ஒரு நெருப்புப் பொறி மீது ஒரு நேயப் பார்வை" என்று தலைப்பிட்டுக் கொடுத்தேன். ஆம்! அவருடைய கவிதைகள் முழுவதும் புயல், புரட்சி, கனல், தீ இவ்விதமாகச் செல்கிறது. இதற்கு நான் அணிந்துரை தருவது எப்படி? இவர் இருபதே வயதான இளைஞர். அவரது மனக் குமுறல்கள் சமுதாயம் பற்றியன. அந்த ஜ்வாலை தரும் இதமான சூட்டில் அல்லது தணலில் அவர் நடக்கும் வேகத்தை நீங்களே உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொள்வீர்கள். நான் கூறவந்தது கவிதையின் அழகு பற்றி. ஆதலால் அது நேயப்பார்வையாயிற்று. கவிஞர் றூகா அவர் களின் கவிதையில் வெளிப்படும் பாவங்களை நோக்கும்போது ஆன்ம உயிரின் உயிரோட்டங்களை இவர் கவிதை ஆக்கித் தந்தால் பெருவெற்றி பெறுவார் என்று தோன்றுகிறது. நான் மிகைப்படக் கூறவில்லை. இவருடைய கவிதைகளைப் படிக்கும் போது உருது கவிஞர் மிர்சா காலிபின் கவிதைகளில் தென்படும் உணர்வு பாவங்களும் வங்காளக் கவிஞர் தாகூரின் கவிதைகள் தரும் உயிரோட்டமும் எனக்கு நினைவுக்கு வரு கின்றன.

கவிஞர் றூகா தொடர்ந்து இத்துறையில் ஈடுபட்டு வளரும் வசன கவிதைக்கு சொற்சுருதி சேர்ப்பாராக. இவருடைய கவிதையின் எதிர்காலம் பிரகாசமாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

அக்கரைப்பற்று
21-11-1990

அன்புடன்
**அ.ஸ. அப்துஸ் ஸமது,**
(B.A., Hons.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழ்நாடு வக்ஃபு வாரியப் பத்திரிகை 'இஸ்மி' யின் ஆசிரியரும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பேரவைச் செயலருமான தத்துவக் கவிஞர் இ. பதுருத்தீன் அளித்த*

# மதிப்புரை

மரக் கலப்பைகளை மாற்ற முனைந்த போது, எந்திரக் கலப்பைகள் இறக்குமதியாயின. அதே போல, மரபிலக்கணங் களை விலக்க முனையும் போது, அதற்கு மாற்றாகப் புது மரபுகளைப் புனைந்து கொள்ள வேண்டும்.

இந்த வகையில்-'சொல் புதிது, பொருள் புதிது' என்று புதுக் கவிதைகள் புனலாட வந்தன; புகழாடிக் கவர்ந்தன. ஆனால், இன்று இவை, புற்றீசல்களோடு போட்டியிடத் தொடங்கியதுகண்டு, என் இதயப் புல்லாங்குழலில் இருமல் ஏற்பட்டு விட்டது.

இலக்கணப் பாட்டில்களில் இருந்த கவிதை ஷாம்புவைப் புதுக் கவிதைப் பாக்கெட்டில் அடைத்துக் கொண்டு வந்த போது, அதன் எளிமையும் இலகுவும் எழிலும் பெரிதும் வர வேற்பைப் பெற்றன. ஆனால், போகப் போக-அதன் தரம், தாரம் இழந்து அதன் செறிவு, சிகரட்டின் சாம்பலாகி-அதன் புதுமை முதுமைதட்டத் தொடங்கியது வேதனையே!

பைசா நகர சாய்ந்த கோபுரம், ஓரளவுக்கு சாய்ந்து காணப்படும்போது, அதை அதிசயமாகக் கண்டுவியந்த உலகம் -அக்கோபுரம் முற்றுமாகச் சாயத் தொடங்கினால் அதிசயித்து வியக்குமா?

எளிமை என்ற சாய்வு-இன்று எளிமைக்கும் எளிமையாகி-உரை நடைக்கும் கவித்துவத்திற்கும் ஊடே வேலி இல்லாமல் போனது, புதுக் கவிதைக்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு விபத்தாகும்.

LIBRARY
COLOMBO 7.
DATE: 2017/2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விபத்தின் காயத்திற்கு ஒத்தடமாக-அக்கரையூர் மு. நூராவின் 'கிழக்கில் வெளுத்த வழக்கு' விளங்குகிறது. மதிப்புக்குரிய இலக்கிய வித்தகர், வழக்கறிஞர் எஸ் எம் ஹனிபா அவர்கள், இந்நூலின் அச்சுப் பிரதிகளைத் தந்து, எனது மதிப்புரையைக் கேட்டுக் கொண்டார். ஓர் உணர்ச்சிப் பூர்வமான நூலை எனக்குப் பசியாறத் தந்த அவருக்கு என் நன்றிகளை நங்கூரமாக்கிக் கொள்கிறேன்.

*'விதி வரைந்த*
*மனித மடல்களை*
*இறைவனுக்கு அஞ்சல் செய்யும்*
*தபால் பெட்டிகள்'* என்று 'சமாதி'யை உருவகப் படுத்தி இருக்கும் பாங்கு-கவிஞரைக் கவித்துவ மினராவில் ஏற்றிப் பரிமளிக்கச் செய்கிறது.

'பொறுத்தது போதும்' என்ற தலைப்பில், கவிஞர் பேனாவை பீரங்கி ஆக்கிவிட்டார்.

*"மூட்டைப் பூச்சிகளிடம்*
*ரத்த தானம் கேட்ட*
*எங்கள்*
*முட்டாள் தனத்தை"*-என்று நொந்து கொண்டு-

*"உங்கள்-*
*தலை எழுத்துக்களை மாற்ற*
*தமிழ் எழுத்துக்களை*
*இனி*
*ஆயுத எழுத்துக்களாக*
*மாற்றிக் கொள்ளுங்கள்!"* என்று வீறுகொண்டெழுகிறார் கவிஞர்.

வித்தியாசமான தலைப்புக்களில், வித்தியாசமான கருத்துச்களை விதைத்த கவிஞருக்கு, ஓர் அரியாசனம் காத்துக் கொண்டிருக்கிறது.

22-1-1991
சென்னை-600 081

அன்பன்
**இ. பதுருத்தீன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்வன...


**பாட்டிகளுடன் ஒரு பேட்டி**

| | |
|---|---|
| இதயங்களுடன் | 12 |
| கண்ணீருடன் | 24 |
| வியர்வையுடன் | 33 |
| தாசியுடன் | 43 |
| சமாதிகளுடன் | 56 |
| பசியுடன் | 60 |
| சமூகங்களுடன் | 65 |

**ஜோடிமாற்றம்**

| | |
|---|---|
| ப்ளக் அன் வைட் | 68 |
| அன்றும் இன்றும் | 73 |
| அங்கும் இங்கும் | 74 |
| ஆத்திகனும் நாத்திகனும் | 75 |
| சாக்கடையும் சந்தனமும் | 78 |
| ஒரு வேண்டுதல் | 82 |

**இன்னொரு யுத்த காண்டம்**

| | |
|---|---|
| பொறுத்தது போதும் | 86 |
| கிழக்கில் வெளுக்காத வழக்கு | 95 |

**கவிதை மொட்டுக்கள்**

| | |
|---|---|
| ஹைகுகளும் சென்றியுக்களும் | 98 |
| கல்லறை வாசகங்கள் | 102 |

**பொதுவுடமை**

| | |
|---|---|
| காதலில் தொடங்கி கல்லறை வழியே | 108 |
| விளம்பர ஓவியங்கள் | 118 |
| ஐ லவ் யூ | 119 |
| ஹவுஸ் ஃபுல் | 120 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம் கிழக்கு தேசத்தின்
மைந்தர்களாக
மரித்த - மரித்துக் கொண்டிருக்கின்ற
மாலை மரிக்கப் போகின்ற
அத்தனை அப்பாவி மனசுகளுக்கும்
மருந்து தடவும்
என்
கன்னிக் காணிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டிகளுடன் ஓர் பேட்டி

சுயசரிதை என்பது சுங்க அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டுள்ள அடையாள அட்டைகளல்ல. அவை யாவுக்கும் இயல்பாக இருந்து விடுகிற வரதட்சணையாகும்.

மானிட யதார்த்தங்களில் இருந்து வெகுதூரம் விலகி நிற்கின்ற ஏகாந்த நிலையின் எல்லைக் கோடுகள் அவை. சமத்துவப் பெண்ணின் சாணைக் கூறைகள்!

இதோ...உங்கள் முன் நான் ஒரு பேட்டிக்காக பல பாட்டிகளுக்கு (கட்சிகளுக்கு) கவிதை ஆடை கட்டி சுயசரிதை மணவறையில் ஏழு கன்னிகளை அலங்கரித்து வைத்துள்ளேன்.

வாத்தியம் இசைக்கிறது; வாருங்கள்.

உள்ளே பாருங்கள்.

என் கவிதைகளை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயங்களுடன்

இரும்புகூட சுயசரிதை சொல்லும் நம் நாட்டில் இதயங்கள் இரண்டு நிமிடங்களை எடுத்துக் கொள் ளட்டுமே...பரவாயில்லை!

கல்லாதவர்களும் செவிமடுக்கலாம் இப்போது!

சரீரத்தை சரிப்படுத்த
உதிரங்களால் உண்டான
சதைப்பிண்டங்கள்
நாங்கள்!

மார்பு என்ற மறியல் சாலைக்குள்
மறைத்து வைக்கப்பட்டிருக்கும்
ஆயுள் கைதிகளின்
அணி வகுப்புக்கள்!

மனித இயந்திரத்திற்கு
எரிபொருளுக்கு பதிலாக
குருதி வினியோகத்தை
திறன்படச் செய்வதற்கு
உடன்பட்ட உத்தமர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு சுவர்களுக்குள்
தடுத்து நிறுத்தும்
சிறைச்சாலைக்கு பதிலாக
நான்கு அறைகளுக்குள்
நாங்கள்
வாசம் புரிகின்றோம்!

காற்றடித்தால் கிரிக்கில்காளாகும்
ஏழைகளின் கூரைகள் என்ன...
எங்கள்
கூரைகளும் சுவர்களுமே
மனித மூச்சுக்களில் கூட
ஆட்டம் கண்டு விடுகிறது!

உங்கள் மேனிகளில்
தேமல்களுக்கு பதிலாக...
எங்கள் தேகங்களில்
சந்தேகங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்தோறும் நாங்கள்
இருட்டறையில்
சிறை வைக்கப்பட்டதால்
எங்கள்
உள்மூச்சு வெளிமூச்சுகளில்
உதிரங்கள் மட்டும்தான்
வெளியிடப் படுகிறது!

இருபுயங்களும் இல்லாத
மானிடர்க்குக் கூட
இருதயங்கள் நாங்கள்
இருந்து விடுவதால்...
இமயங்களைக் கூட
இடம் பெயர்த்தி விடுவோம்!

நாங்கள்
உயிருடன் உள்ளவர்கள்
உண்மையில் அதனால்
உள்ளவர்கள் பெயர்வைத்தவர்கள்
'உள்ளங்கள்' என்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்காயின் அமைப்பை
அண்ணளவாகக் கொண்டவர்கள்
அவரவர் கைமுஷ்டியை
பிரதிநிதித்துவப் படுத்த
பிறவி எடுத்துள்ளோம்!

ஆன்மாக் குழந்தைகள்
அகல விழித்துக்கொண்டு
கண்மூட
அடம் பிடிக்கும் போது ...
மதுக்கோப்பைகளின் மௌன ஒலிகள்
தாலாட்டுக்களாகி எம்மை
தலைகுனிய வைக்கின்றன!

மனைவியைத் தேர்ந்தெடுப்பதில்
தவறிவிடுகின்றவன் எவனும்
எங்களைத் தேர்ந்தெடுக்காததில்
வெற்றி கண்டு விடுகிறான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் கொஞ்சம்
உரசுகின்ற போது...
உங்களில் பலர்
உச்சரித்துக் கொள்வார்களே
இறைவனின் பெயரை!

வார்த்தைகளால் எதிரிகளை
ரணப்படுத்தும் போது
ஜீரணிக்க முடியாமல்
நாங்கள்
இரத்தவாந்தி எடுப்பதை
உங்கள்
கண்கள் கூட
காட்டிக் கொடுத்து விடுகின்றனவே!

காலம் முழுதும்
உங்களுக்கென்றே
சேவை செய்யக் கற்றுக் கொண்டதால்
நாங்கள் உங்கள் முகங்களை
எண்ணிக் கூடப் பார்க்கமுடியாமல்
நிழல் தேடித் தோற்றுப் போகும்
வெளிச்சங்களுக்கு
மச்சங்களானோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவர் எவருக்கோ
இதயமாக இருந்துகொண்டு
நாங்கள் மட்டும்
அரக்கர்களாக அசைகின்றோம்
நாணமற்ற நிலையில்!

எம்மைச் சேர்ந்தோர்
சேவை செய்வதில்
ஆர்வம் காட்ட மறுத்தால்
வைத்தியரின் பால் எம்மை
விசாரணைக்குள் மாட்டி விட்டு
எங்கள்
வாக்குமூலத்தின் மூலம்
உண்மையை வரவழைத்து விடுவீர்களே!

தற்கால
மருத்துவ அரசாங்கங்களின்
திட்டமிட்ட குடியேற்றத்தால்
சிலவேளை எங்களில்
சிறப்பற்றோர் சிலபேரை
குடிபெயர்த்தி விட்டு
வேறு எவரையோ
குடியேற்றி வருகிறார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் பூரா எங்கள்
கடமை உணர்ச்சிக்காக
நீங்கள் செய்கின்ற
கைமாறா இது?...

நல்ல எண்ணம் சேர்ந்த செயல்கள்
ஏரிபோல் கனத்தாலும்
எள்ளளவே வரும்
தீய செயலுக்கு
எங்களை மட்டும் ஏன்
வம்புக்கிழுக்கிறீர்கள்?...

என் முன் வீட்டு
மூளையான் செய்யும்
மூடச் செயல்களுக்கு
முழுக்க முழுக்க
பழியை எம்மால்
சுமக்க முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரிகள் புடைசூழும் போதும்
அபாயங்கள் ஆட்கொள்ளும் போதும்
உங்களுக்காக
நெகிழ்ந்து கொடுத்து
ஒப்பாரி வைக்கும் நாங்கள் ...
சிலருக்கு மட்டும்
திருடும் போதும் திருடிய பின்பும்
திட்டிக் கொண்டிருப்பது
பொறுக்க முடியாத
பொல்லாப்புத் தானே?

நாங்கள் மட்டும்
விசுவாசமாக இருக்கும்போது
நீங்கள் தானே
சின்னவீடு வைத்து
இரண்டு இதயங்களுடன்
இல்லறம் நடத்துகிறீர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமைகள் சுமக்கமுடியாதபோது
உங்கள்முதுகுகள் வண்டிகளாகும்
வண்டிகள் சிலவேளை
சுமக்க மறுக்கும்போது
இந்தப் பன்றிகள்தாமே
அடிமாடுகளாகும்!

எட்டுமணி வேலைசெய்யும்
அரச ஊழியர்களுக்கு
ஆயுள் தண்டனை என்றால்
என்னாளும் வேலை செய்யும்
ஆண்டவன் ஊழியர் எமக்கு
ஆயுளே தண்டனை தானோ?...

நீங்கள்
துக்கித்துக் கொள்ளும் போது
நாங்கள் தானே
விக்கித்துக் கொள்கிறோம்...
நித்திரைக்குக் கைகாட்டிவிட்டு
கண்ணீருடன் அல்லவா
கைகோத்துக் கொள்கிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் எங்களை
சுட்டிக்காட்டும் போதெல்லாம்
மறந்தே விடுகிறீர்கள்...
எப்போதோ எங்களை
ஒளித்து வைத்திருக்கும் செய்திகளை!

ஓ...மானிடமே...
மறந்துதான் விட்டீர்களா
நாங்கள் இயங்க மறுத்தால்
நான்கு பேரல்லவா சுமக்க வேண்டும்..
இடுகாடு நோக்கி!

எங்கள் இல்லங்களின்
சாவிகளை எங்கோ ஒளித்துவிட்டு
பூட்டுக்களை மட்டும்
வெளியே
தொங்க விட்டுக் கொள்வதன் மூலம்
எமக்கு
வெள்ளையடித்துக் கொள்கிறீர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வாலிபத் தூண்டில்களில்
எங்களை இரையாகப் போட்டு
வேறு எவரையோ
பிடிக்க நினைப்பதெல்லாம்
தண்ணீர் வெள்ளத்திலல்ல
பெண்களின்
கண்ணீர் வெள்ளத்தில் தானே ...!

காரியத்தை
நீங்களே செய்துவிட்டு
காரணங்களை மட்டும்
எங்கள் தலைகளில்
சுமத்தி விடுவதென்ன...
உங்கள் தேசத்தின்
தோற்றுச் சின்னமா...?
இல்லை
வெற்றிச் சின்னமா...

அன்பான எஜமான்களே...
நீங்களறிய மாட்டீர்கள்
நாங்களறியாத உண்மைகளை
ஆனால்...
நாங்கள் தெரிந்து வைத்திருக்கிறோம்
நீங்கள்
அறிந்து செய்த உண்மைகளை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியாவது எங்கள்
இருப்பிடங்களுக்கு
மதிப்பளியுங்கள்!

எங்களை எடுத்தெறிந்து விட்டு
முள்வேலிகளுக்கு நீங்கள்
முலாம்பூசும் வேலைகளை
எப்போது கைவிடுவீர்களோ
அப்போதுதான் உங்கள்
உலகமே உருப்படும்!

போதும்...போதும்...
முதுகுகளுக்குப் பின்னால் நாங்கள்
ஒளிந்திருந்தது போதும்
இனியாவது இவர்கள்
முகங்களுக்கு முன்னால்
முன்னேறி வருவதற்கு
முதல்வா எமக்கொரு
வரம்தர மாட்டாயா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீருடன் . . .

கண்ணீர் கதை சொல்லப் போகிறதாம். இருந்தாலும் நம் தேசத்தின் கன்னிகளின் கதையை விடவா?...எதற்கும் கைக்குட்டை ரெடிதானே?

விழிக்குளத்தின்
அணைக்கட்டுகளின்
உப்புக் கசிவுகள் நாங்கள்!

ஆனந்த விழிகளின்
எச்சங்கள் சேர்ந்த
சோகக் குழிகளின்
மச்சங்கள்!

வரப்போகும் சோதனையை
எடுத்துக் காட்டும்
கண்ணாடிகள்!
வந்துவிட்ட வேதனையை
பிடித்துக் காட்டும்
படச்சுருள்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளின் விழிகளிலும்
ஏந்திழையின் மொழிகளிலும்
இருப்பிடத்தை அமைத்து
இல்லறம் நடத்துகிறோம்!

சிறிய பாட்டில்களுக்குள்
சிறைப்பட்ட
பெரிய மனிதர்களின்...
குடும்பங்கள் யாவுக்கும்
நாங்களேதான்
செல்லப்பிள்ளைகள்!

நாங்கள் வெளியேறும்போது
துக்கக் கதவுகளை
திறந்து வைத்துவிட்டு
தூக்க ஜன்னல்களை
மூடிக் கொள்கிறோம்!

எங்கள்
ஊறல்களும் தூறல்களும்
மனவானின்
சோக முகில்களைப் பொறுத்துக்
கூடும்; குறையும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கெல்லாம் மனங்களுக்கு
விபத்து நேர்கிறதோ
அங்கெல்லாம் நாம்
முதலுதவிக்காக முந்திக்கொள்கிறோம்!

எம்மினத்தை அழித்துவிட
அன்று தொட்டு
இன்று வரை
ஆராய்ச்சிதான்
நடந்து விரைந்தது
முடிவினில்
அரசியல் அந்தஸ்துகளாம்
பந்தோபஸ்துகள்
பாழாய்த் தானே போனது!

வந்தவந்த தலைவர்களெல்லாம்
எங்கள் இனப்பெருக்கத்துக்குக்
கருத்தடை மாத்திரைகளை
கதையளவில் வினியோகித்தால்
காலம் பூராவும் நாங்கள்
உங்களிலே நிலைத்திருக்கக்
கற்றுக் கொண்டோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் முன்னோர்கள்
நிலா முற்றத்தில்
கதை சொல்லும் போது...
எங்கள் விழிகளில்
வேறு யாரோ
வந்து கொண்டிருப்பார்கள்
ஏனென்றால்
அவர்கள் ஆளப்பட்ட காலம்
பாசிஸத்தின் படுகுழியாம்
மக்கள் கண்களிலிருந்து
அவர்கள் வெளியேறுவதற்குக்கூட
தடை விதித்தார்களாம்!
இப்போதுகூட என்ன...
எங்கள் சந்ததிக்கும்
தடைவிதிக்கப் பார்க்கிறார்கள்
தற்கால
பாசிஸ பயங்கரவாதிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் பூராவும்
கண்ணீரிலேயே காலம் கழிக்த
தண்ணீர்த் துளிகள் எம்மை
அழித்து விடுவதால்
அப்படி என்னவாம்
அவசரம் உங்களுக்கு?

ஆனந்தம் வரும்போது எமக்கு
அரங்கேற்ற விழா நடத்தும்
உங்களை
சோகங்கள் சூழ்ந்து கொள்ளும் போது
ஏன் எமக்கு
மூடுவிழா நடத்த
முடிவு எடுக்கிறீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை எரியும்போது
ஊற்றப்பட்ட எண்ணெய்
எந்த மண்ணெண்ணெய்க்
கிணற்றிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்டது...?
இல்லை யில்லை...
எங்கள்
கண்ணெண்ணெய்க் கிணற்றிலிருந்துதான்
அள்ளி விசிறப்பட்டது!

நாங்கள்
அதிகமாக வந்துவிட்டால்
கண்ணீர் வெள்ளத்தில்
கண்ணே வெளியேறிவிடக் கூடாது
என்பதற்காக
கடும் வேளையில் மட்டும் நாம்
கணக்காக வருகின்றோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில் நாங்கள்
எதிரிகளிடமிருந்து காக்க
முதலைக் கண்ணீராக
முனைந்து முன்வராவிட்டால்
இதுவரை
உங்கள் சமாதிகளுக்கு
தடம்தெரியாது போயிருக்கும்!

பூமி உருண்டையின்
முக்கால் பங்கையே
விழுங்கிய தண்ணீருக்கு
புகலிடம் தரும் நீங்கள்...
வாழ்க்கை வட்டத்தின்
அரைப்பங்கைக் கூட
விழுங்காத கண்ணீருக்குக்
கண்டனம் தெரிவிப்பது
எந்த வகையில்
சரியாகும் மக்காள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்களுக்கு
தூபம் இடுவதும்
போராடும் போது நாங்கள்
தூவப்படுவதும்
உங்களால் தானே
உந்தப் படுகிறது!

நாங்கள் வெளியேறும்போது
ஓலங்கள் மட்டும்
ஒத்திகை பார்ப்பதில்லை
விழிகளில்
ஊறு நூண்படங்களும்
மருத்துவர் மருந்தைப்போல்
ஒத்தடம் சேர்த்து
ஒத்திகை பார்க்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ...மானிடமே!...
எங்கள் சுதந்திரங்களுக்கு
சுருக்குப் போட
நினைக்காதீர்கள்
ஏனென்றால்...
மரணம் நிறைந்த தோல்வியுடன்
வறுமை அடர்ந்த வரதட்சணை கொண்ட
நான்கு நண்பர்களுடன்
நாமும் இருப்பதனால்
வெள்ளையர் எங்களை
வெளியேற்றி விட
எவரால் முடியும்?...

ஞாபகம் இருக்கட்டும்
நினைத்தால் வருவதல்ல நாங்கள்
இதயம்
கனத்தால் மட்டுமே
வருபவர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியர்வையுடன் . . .

நம் சரீரங்களில் இருந்து சதாவும் சென்று செலவழியும் வியர்வை பெரும் வேதனை விஷயம் தானே?

கேட்டே பார்ப்போம் அவைகளிடம்.

தாகமென்ற இல்லறத்தில்
வாய்க்குழியில் நீரைவிட்டு
வாழ்க்கை அமைத்ததனால்...
'அனுசேப' அயோக்கியரால்
வியர்வை என்ற
விதவையானேன்!

அகத்தோல்கள்
உமிழுகின்ற
புறத்தோலின்
எச்சில் நாங்கள்

பொய்யென்ற உடலைவிட்டு
மெய்யென்ற உலகைக்காண
உயிரை உதறிவிட்டு
புறப்பட்ட
துறவி நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டாளி வர்க்கத்தின்
தோள்ப்பட்டை, நெற்றிகளில்
நெடுநாளாய்க்
குடியிருப்பை அமைத்துள்ளோம்

வார்த்தைகளைச் செலவழிக்கும்
அரசியல் வாதிகளின்
வாய் பார்க்கும்
வாக்காளர்கள்;
பேச்சாளர் முகத்தையே
பார்ப்பதற்கு முன்...
எப்போதும்
எம்முகம் தானே முந்திக்கொள்ளும்...!

என்றென்றும் எப்போதும்
தோல் வீதிகளில்
ஊர்வலம் வரும் நாங்கள்...
கட்டிலறை இருக்கும்வரை
கல்லறைக்கு வரமறுக்கும்
காமுகன் உடலினிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிரவு மாப்பிள்ளையின்
மணக்கும் உடலதிலும்
நாணத்தால் நாம் மட்டும்
முதுகுப்புறம் நோக்கி
முகத்தைப் புதைத்துக் கொண்டு
ஊர்வலம் நாம் வருவோம்!

பணக்கார வர்க்கத்தின்
பக்கத்தில் சென்றாலோ
கைக்குட்டைக் காலனித்துவத்தால்
எம்மைக்
கைதுசெய்து விடுகின்றனர்

'ஏசி' அறைகளும்
மின்விசிறித் தாக்குதலும்
எம்மை
ஆயுள் கைதி ஆக்குவதில்
ஆர்வம்காட்டி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும்...
**'பயம்'** என்ற எனது நண்பன்
பணக்காரக் கும்பலுடன்
பரிந்து பேசி எம்மை
ஜாமீனில்
கொண்டு வருவதும் உண்டு!
அப்போதெல்லாம் நாம்
சமதர்மக் கொள்கையினைப்
பரப்புவதில்...
பாட்டாளிகளின் பங்கைப்போல்
பணக்காரர்களிடம்
பகிர்ந்தளிப்போம்!

கழிவு நீரால் நிரம்பிய
எமது உடல்...
உயிரை இழக்கும்போது
உறைந்து கொள்ளுமே
ஊத்தைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்புநீர்த் துளிகள்
எம் உடலில் பட்டால்
உரிமையிழந்த பிரஜையாவோம்
பெருமை நிறைந்த
இப்பூமியிலே

உடற் கூட்டில்
உள்ள பகுதிகள் யாவையும்
நாமே ஆள்வதாக
ஒரு குற்றச் சாட்டு
உண்மையில்...
கவர்க்கட்டு
கழுத்து மடிப்பு
கால் மூட்டு
இவைகள் ஐயா
எமக்குக் கால்க்கட்டு!

வெப்ப காலங்களில்
எம்மை
சூரிய கதிர்களில் இருந்து காக்க
கொப்புளக் கூடாரங்கள்
அமைத்துக் கொண்டு
அமைதியாகக் குடியிருப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவுடர் பட்டாளங்கள்
எம்மைப்
படையெடுத்து வருவதைக் கண்டால்
பணிந்தே போய்விடுவோம்
துணிந்தே போய் மடிவோம்!

எங்களுக்கு
'நிறமுள்ள உருவமுண்டா...'
எனும் கேள்வி எழும்போது
முண்டியடித்துக் கொண்டு
'நாங்கள் மஞ்சள் நிறம்'
என்பதை
சுலோக அட்டைகள்
தூக்கிக் காட்டும்
கைகளின்
அடிப்பாகங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரண தரவுகள்
இன்றும் தேவையென்றால்
'கார்பன்' தாள்வைத்துப்
பதிக்காத பிரதி உண்டு
அவர்கள் கைகளில்
ஆம்...
'ஷர்ட்டு'க் கைகளில் மஞ்சளாக!

எங்கள் பாய்விருப்பால்
நோய் விருப்பும்
நொடி விருப்பும்
நுகர முடியாத
துருவெடுப்பும்
தலைவிரித் தாடுகிறது என
தம்பட்டம் அடித்துக் கொள்ளும்
தனி மனிதம்
சற்றுத்தான் எங்கள்
புனிதங்களுக்கு
புகழ்சேர்க்க மறுக்கிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுக்கு ஊறு செய்யும்
உதவாக் கட்டைகள் நாங்கள்
ஒன்றுகூடி ஹர்த்தால் செய்தால்
வெள்ளையர் எங்களை
விரட்டிவிட யாரால் முடியும்?

வீணான வதந்திகளும்
வெகுண்டெழும் பீதிகளும்
உங்களைக்
கௌவிக்கொள்ளும் போது
நாங்கள்தானே இதுவரை...
சூடான உங்களுக்கு
எங்களையே இறைத்து
குளிர்பானம் தந்துள்ளோம்!

ஏன்...
மழைக்கால நாட்களில்
நாங்கள்
நனைந்துவிடக் கூடாதென்பதற்காக
சற்று ஓய்வெடுத்து
வெளியேறாவிட்டால்
நீங்கள்தானே வேதனையோடு
விரைந்து வெளியேறுகிறீர்கள்
மலசலகூடம் தன்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் வந்து
முகம் காட்டாவிட்டால்
உங்களில் சிலர்
அறவே தலைகாட்ட மாட்டார்களே
குளியலறைப் பக்கம்!

ஏன் மனிதமே
எங்கள் நாமங்களை
ஊருக்குள் எச்சரிக்க வைத்து
உச்சரித்துக் கொள்கிறீர்களே...
'வாசம் என்னிலிருந்து வரவில்லை
வருகிறது...வியர்வையில் இருந்து' என்று

அன்பான காதலர்களே...
நீங்கள் அறிய மாட்டீர்கள்
நாங்கள்
குளித்து வருவது...உங்கள்
குருதியில் இருந்து என்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதாவது நீங்கள் எம்மை
இனம் காணவில்லையா...
இனம் காணுங்கள்
எம்மோர் மனம் காணுங்கள்!

எங்கள்...
ஒவ்வொரு இறப்பும்
ஒவ்வொரு பிறப்பு
ஒவ்வொரு பிறப்பிலும்
தனித்தனிச் சிறப்பு!

மறந்து விடாதீர்கள் மனிதமே...
உங்கள்
மார்பு சுமக்க முடியாதபடி
நாங்கள் உங்கள்
வியர்வைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாசியுடன் . . .

இதோ...தாசி ஒருத்தி பேசப் போகிறாள். என் வாசகர்களே...நீங்களும் வாடிக்கையாளர்கள் தானா?

எங்கே...

அவள் 'டிப் டிக்' இரசங்களில் முகம் பார்த்துக் கொள்ளுங்கள்!

பொது நூலகத்தின்
கறுப்பு வாசகர்களின்
கையெழுத்துப் பிரதிகள்
நாங்கள்!

கந்தைக் கற்புகளை
கசக்கிக் கட்டாததால்
சமுகமென்ற சமுத்திரத்தால்
சபிக்கப்பட்டவர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மேக்கப்' கூடைகளில்
கற்புக்களைச் சுமந்து
கடைத் தெருக்களிலே
காசுக்கு விற்பதனால்
காலமெல்லாம் நாங்கள்
காற்றைச் சுவாசிக்கிறோம்!

பெண் என்ற இல்லத்திற்கு
வெட்கங்களால் வேயப்பட்ட
வேலிகளை
வேகமாகப் பிரித்துவிட்டு
கூலிகளுக்காக
வெளியே கிடக்கின்றோம்!

காணாமல் மறையும்
கற்புக் கனவுகளிலிருந்து
கார்மானப் படுத்த...
கள்வருடன் நாங்கள்
கைகுலுக்கிக் கிடக்கின்றோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்ற ஓடத்தில்
வறுமை ஓட்டை விழுந்ததால்
மானங்களுக்குக் கூட
மதிப்புக் கொடுக்காமல்
இவர்கள்
கந்தைத் துணிகளைக் கிழித்து
அடைத்துக் கொள்கிறார்கள்!

நரக வாழ்க்கை நலம்தர மறுத்தாலும்
நகர வாழ்க்கையில் நாம்
நலம்பெற்று வாழ்கின்றோம்.
ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில்
அலாதியாக கழித்தாலும்
அடுத்த கணமே நாம்
பழைய குருடியாக
சேரிகளின் கதவை
செல்லாமலே தட்டுகிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலிப் பாலங்கள் தகர்த்தப்பட
போலிக் காதல்கள் மெய்ப்பிக்கப்பட
வசதியின் வால் நறுக்கப்பட்ட
வரதட்சணை வரிகளுடன்
பரிகளாக நாங்கள்
நேற்றுப் புறப்பட்டவர்கள்!

பித்தளை 'போர்டு'களை
முன்புறத்தில் மாட்டத் தவறினாலும்
எங்கள்
முதுகுப் புறத்தைப் பார்த்து விட்டு
முண்டியடித்துக் கொள்கிறார்கள்
விளம்பரமில்லா எங்கள்
வியாபார ஸ்தலம் நோக்கி!

மூலதனம் முடக்காத
உணவுச் சாலைகள்
உணவுக்கு பதிலாக
ஊத்தை உடல்!
உண்டபின்பு உறங்குவதற்குத் தடை
ஆனால்
உண்ணும் போதே
தாராளமாக உறங்கலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பலுக்கும் கேள்விகளுக்கும்
என்ன தொடர்பு இருக்கிறதோ
அதே தொடர்புதான் இவர்களுக்கும்
ஏனென்றால்...
இவர்கள் வயசு ஏற...ஏற...
வருமானங்கள் மட்டும்
இறங்கு வரிசையுடன்
இணைந்து கொள்கின்றன!

எவரையும் ஏவிவிடும்
மன்மதன் என்ன
எங்களுடன்
இரண்டே நிமிடங்கள்
இணைந்து கொள்ளட்டும்...
பெட்டிப் பாம்புகூட
தோற்றுப் போய்விடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமன் எழுதிவைத்த வினாக்களுக்கு
விடைகளாக
விலைமாது நாங்கள்
விளக்கம் தருகின்றோம்!

விளக்கங்களும் பழக்கங்களும்
துலக்கங்கள் இல்லாததால்
அடிக்கடி நாங்கள்
நீதி மன்றங்களில்
நிறுத்தப் படுகின்றோம்!

குற்றச்சாட்டுப் பட்டியலில்
இடப்பட்டுள்ள கையொப்பம்
சமுகம்தான் எங்கள்
விரோதிகள் என்பதை
காட்டிக் கொடுத்து விடுகின்றன!

குற்றச் சாட்டுகளாக
நோயின் வாரிசுகள்
'எயிட்ஸின்' ஆதரவாளர்கள்
கலாச்சாரத்
தாக்கங்களின் கடையாணிகள்
அனாச்சார ஆக்கிரமிப்பின்
அறிவிப்பாளர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊமையின் வழக்கில்
ஆஜராகத் துடிக்கும்
ஒரு சாட்சியாக
நாங்களே எமக்கு முன்வருவதால்
எங்கள்...
முக்கியகால
நடவடிக்கைகளைச்
சுட்டிக் காட்டி
சாட்சிகள்கூட
நிராகரிக்கப் படுகின்றன!

எங்கள் விசாரணை
நீதி மன்றங்களுடன்
நின்றா விட்டது?...
இல்லை
சட்டமன்றம் வரை
நீண்டே சென்றது!

முடிவில்...
ஒரு தேசமே ஒன்று சேர்ந்து
ஒரு தனி முயற்சிக்கு
ஒடிச்சிப் போட்டது
ஒருசாண் வயிற்றுக்கு
முடிச்சுப் போட்டது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவாளிகள் எங்கோ
குடியிருக்க
சுற்றித் திரியும் சுற்றவாளிகள்
எம்மை
கைதிக்கயிறுகள்
எவ்வளவு சுலபமாக
சுவீகரித்துக் கொள்கிறது தெரியுமா?

நாங்கள்
கற்புடையவர்கள் அல்லதான்
ஆனால்
கற்பழிக்கப்பட்டவர்கள்!
ஆம்...
வறுமை என்ற எதிர்கட்சிக்கு
வாக்குகளைப் போட்டதால்
சமூகம் என்ற ஆளும் கட்சியால்
கற்பழிக்கப் பட்டவர்கள்!

உள்ளங்களை
எவருடனோ உலவவிட்டு
உணர்ச்சிகளுக்கு மட்டும்
உரிமையாளனுக்கு
உடலைத் தீனிபோடும்
உங்கள் சமுகமும்
விபச்சாரத்தின் ஊற்றுத்தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் நீங்கள்
இயற்கையைக் காணவில்லையா?
இதோ...
மாலை வேளையறிந்த சூரியன்
தன் கதிர்க் குழந்தைகளை
கக்கங்களில் இடுக்கிக் கொண்டு
புறப்படும் வேளை...
தன் மனைவி வானத்தின்
தற்காலிகப் பிரிவுக்காக
கண்கலங்கி விடுகின்றது!

கொஞ்சம்கூட வெட்கமில்லாமல்
கதிரவன் வெளியேறும்போது
சந்திரனுக்குத் தன்னுடலை
ஒப்படைத்து விடுகிறதே வானம்!
அந்த வானத்தின்
பத்தினித் தனத்தைக் கண்டு
தாமரை மட்டுமா
தலை குனிந்து கொள்கிறது?...
இல்லை...நாங்களும்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிசேர்க்கும் கட்டடங்கள்
எங்கோ
சினிமா கட்டணங்களுக்குள்
கௌரவமாக மறைய
விதிசேர்ந்த
இக்கட்டடங்களுக்கோ
சதிமுயற்சி கூட
சாலைவழியே நடக்கிறது!

அன்பான வாடிக்கையாளர்களே!
கண்ணகி தன்கற்பால்
எரிக்க முடிந்தது
ஒரு மதுரையைத் தான்
ஆனால்...
நாங்கள் பல மதுரைகளுக்கு
மன்னிப்பு மானியம்
வழங்கி இருக்கிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவ நாட்டில்கூட
எங்கள் கற்பு
தேசியமயமாக்கப்படுவது
தெரிந்தும்கூடவா
எம்மை
விரட்டிவிட
விரும்புகிறீர்கள்?

எம் நேற்றைய நண்பர்களே!
எங்கள் கலாசாலையிலிருந்து
பட்டம் பெறாத
எந்த மனிதனுக்கும்
மாப்பிள்ளைப் பட்டம் பெறத்
தகுதியிருக்கிறதா?
பரிசீலித்துப் பாருங்கள்
அப்படித்தான் இருந்தாலும்
தாம்பத்திய வாழ்வைச் சரிவர
சமாளிக்கத்தான் முடிகிறதா?
முடிந்தால்...
ஒருவர் முன்வரலாம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உள்ளங்களையும்
கரைத்து விட்டு
கலைஞன் மட்டும்
கரையாது இருக்கிறானே
எப்படி?
எல்லோர் உணர்ச்சிகளையும்
கறந்து விட்டு
நாங்கள் மட்டும்
கரையாது நிற்கிறோமே
அப்படித்தான்!

தாசிகள் நாங்களென்றாலும்
தராசுகள் என்பதை
மறந்திடாதீர் !
ஏனென்றால்...
உங்களில் எத்தனைபேர்
உத்தமர்கள் என்பதை
நிறுக்கும் கோலே
நாங்கள்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கடை வெள்ளத்தால்
நாங்கள்
நனைந்தது போதும்
இனியாவது உங்கள்
சமூக உள்ளங்களில் நீராடும்
சமஉரிமைப் பிரகடனம்
பிறப்பிக்கப்படட்டும்!

எங்கே
எமது பாதைகள் தொடரும் பயணத்தில்
முடிந்தால்... துணிவிருந்தால்
உண்மையிலும் உண்மையாக
எவராவது துணை வரலாமே!

நாங்கள்
எச்சில் படிக்கன்கள்
ஏற்பதற்கு யார் உண்டு
ஏலும்...ஏலும்
ஏலம்...ஏலம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதிகளுடன் ...

சமாதிகளெல்லாம் பேச எழுந்து விட்டன, சமயவாதிகளின் சமகால சரித்திரங்கள் கூட தரித்திரங்களாக மாறும் இவ்வேளையிலே!

வயது முதிர்ந்த
குழந்தைகளின்
இறுதித் தொட்டில்கள்
நாங்கள்!

வசதி குறைந்த
ஏழைகளின்
வாடகை இல்லா
அரண்மனைகள்!

'தன்வீடு-தன்வீடு' என்று
தம்பட்டம் அடித்தவர் கூட
வந்து சேரும்
மண் வீட்டின்
மதில்ச் சுவர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி வரைந்த
மனித மடல்களை
இறைவனுக்கு அஞ்சல் செய்யும்
தபால் பெட்டிகள்!

இதனால்தானோ என்னவோ
எங்கள்
முகங்களில்கூட
முகவரி வாசகங்களை
முறைப்படி எழுதுகிறார்கள்!

மலர் வளையங்களால்
நாங்கள்
அலங்கரிக்கப் பட்டாலும்
மன (அ) வலங்களால்
நிரப்பப்படுபவர்கள்!

சிருஷ்டி தேவனின்
சோசலிஸக் கொள்கைக்கு
'சுப்ரீம்' சோவியத்துகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பவன் என்ன இல்லாதவன் என்ன
படித்தவன் என்ன பாமரனும் என்ன
அறிஞன் என்ன அசடனும் என்ன
அரசன் என்ன ஆண்டியும் என்ன
கறுப்பனும் வெள்ளையனும்
ஆத்திகனும் நாத்திகனும்
சித்தனும் பித்தனும்
ஆண்மையும் பெண்மையும்
எங்கள்
செவ்வகக் கட்டுக்குள்
சேர்ந்துதான் ஆகவேண்டும்!

துரோகிகள் வரும்போது
துன்புறுத்தும் நாங்கள்
மனிதர்கள் வரும்போது
மௌனம் சாதிக்கிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவர்களுக்கு
பள்ளிக்கூடங்கள்
நாங்கள்
இருப்பவர்களுக்கோ
பாடநூல்கள்!

சில மாணவர்கள்
போதிக்கப்படுவதைவிட
சோதிக்கப் படுவதே அதிகம்!
சிலரோ
போதிக்கப் படுவதைவிட
போசிக்கப்படுவதே அதிகம்!

உஷ்...
சப்தம் போடாதீர்கள்
வாழ்க்கைப் போராட்டத்தின்
போர்க்கொடி ஒன்று
இப்போதுதான்
எங்கள் வாசலுக்கு
இறங்கி வந்துள்ளது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசியுடன் . . .

பசிகள் இப்போது பறைசாற்றப் படுகின்றன...பசிப்பவர் யாரோ அவர் வந்து இதைப் பகிர்ந்து கொள்ளலாம்.

ஓ...பார்த்துப் பாத்து...

வயிறுகள் கிடந்த
தவங்களின்
வரங்கள் நாங்கள்

வாழ்க்கையின் வழமைகளில்
பழமையான
இடைச் செருகல்கள்

ஏழைகளின் வயிற்றில்
தலைவைத்துக் கொண்டு
பணக்கார நாவுகளில்
கால் பதித்துள்ளோம்!

எங்களுக்குப் பசிக்கும்போது
உங்களில் வசிக்க வருவோம்
நீங்கள் புசிக்கும் போது
நில்லாமல்
சென்று சேர்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்பிள் கனிகளாலும்
அலங்கார கேக்குகளாலும்
அறுசுவை ஆகாரத்தாலும்
ஆதரிக்கப்படும் நாங்கள்...
பழஞ்சோற்று உப்புக் கரைசலிலும்
பாலில்லா தேங்காய்த் துருவலிலும்
பல நாட்கள் கழித்து
சிறைவைக்கப் படுகிறோம்
ஏழைகளின் வயிற்றறையில்!

குடிசைகளில் நடாத்தும்
சூதாட்டச் சீட்டுக்களுள்
துருப்புச் சீட்டுக்கள்

எங்கள் ஆட்டங்களை
ஆட்டம் காணவைக்க
எவர் புறப்பட்டு வருகிறாரோ
அப்போதே அவர்கள்
ஆட்டம் இழந்தவர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை எம்மை
காட்டிக் கொடுக்க வந்த
போலீஸ் நாய்கூட
எங்களுடன்
கைகுலுக்கியே
பழக்கப் பட்டன!

எம்மை ஒழிக்க வந்த
செம்புகோல்
பேனாக்கள் கூட
நாணத்தால் நெளித்துக் கொண்டன
எதிரே நின்ற
மெலிந்த கவிஞரைப் பார்த்து!

ஒரு சாண் வயிற்றுக்குள்
ஒளிந்து இருந்தாலும்
ஒருமுழக் கயிறுவரை
நெகிழ்ந்து கொடுப்பவர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்து வழங்கிகளே!...
நீங்கள் நினைக்கும் அளவுக்கு
நாங்கள் ஒன்றும்
ஆநீதியாளர்கள் அல்ல
ஏன் தெரியுமா...

நாங்கள் வெளியேறும் போது
பத்துச் சவங்கள்தான் கிடக்கும்
ஆனால்...
காமன் வெளியேறிவிட்டால்
நாங்களும் சேர்ந்தே
வரம்கிடப்போம்!

நாங்களும்
சிறந்த இசையமைப்பாளரே
சைகை காட்டிவிட்டால் போதும்
காலிப் பானைகள்
கெட்டி மேளங்களாகும்
நாவுகளே ஓலமிசைக்கும்
கண்ணீர் பன்னீர் தெளிக்கும்
வயிறு மட்டும்
அபிநயம் பிடிக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கச்சேரிக்கு
டிக்கட் பெறத் தேவையில்லை
ஏனென்றால் அது
நடப்பதே தெருவில்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகங்களுடன் ...

இதோ...ஒரு தீர்ப்பு திருத்தி எழுதப் படுகிறது. அரசாங்க எச்சரிக்கை, 'புகை பிடிப்பது உடல் நலத்திற்குக் கேடு' என்பதாம். இல்லையில்லை .. இதைப் படிப்பது 'உள நலத்திற்குக் கேடாகலாம்'

இப்படிக்கு
சமூகம்!

தன்னைத் தானே
சுற்றிக் கொண்டு
சூரியனையும் சுற்றுவது
பூமி மட்டும் தானா . . .
இல்லை என்பதை
இவர்கள்
இப்படி நிரூபிக்கிறார்கள்
ஆம் . . .
உலக உருண்டையில்
உண்மையாக
உருண்டு கொண்டு
வேறு எவரையோ
உருட்டிவிடப் பார்க்கும்
நான்கு நிடியர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவனை
நம்பிக் கொண்டு
இருப்பவனை
சந்தேகிக்கும்
இருதய நோயாளிகள்!

சந்தர்ப்ப வாதிகளுக்கு
சவுக்கடி தருவதற்காக
சமதர்ம வாதிகளைத்
தேடி அலையும்
சந்தேக வாதிகள்!

ஒரு உபதேசம்...
ஊருடன் பகைக்கின்
வேருடன் கெடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோடி மாற்றம்

வாதங்கள் என்பது வழக்குகளில் மட்டும் தானா வகிடெடுத்துக் கொள்கிறது ... இல்லை என்பதை 'ஆம்' என்று நிரூபணம் ஆக்கிவிடுகிறது என் கவிதைகள்.

வழக்குகளில்தான்! ஆம்...சமூக வழக்குகளில் உங்கள்முன் இதோ...ஆறு ஜோடி...வழக்கறிஞர் கள் அல்ல; வழக்குகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்ளக் அன் வைட்...

இரண்டு மனசுகள் இணையத் துடிக்கின்றன. இடையிலோ றபேபிய நாட்டின் நிற நரைகள் கள நரைகளாக இந்த சின்னஞ் சிறுசுகளில் உட்கார்ந்து விடுகிறது.

அவள் :

கோப்பியாக நானும்
பாலாக நீயும்
நிறம் வெளுத்து
இருப்பதனால்
ஆகாது
காதல் இங்கே!

அவன் :

பாலுக்கும் கோப்பிக்கும்
பயன்பாடு தூரமில்லை
பக்கத்தில் வைத்தால்தான்
பார்வைக்கு மாற்றம் அன்பே
பாலூத்திக் கலந்தாலோ
பருகுதற்கு
சுவைதான் பெண்ணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் :

வீதியில் ஓடும்
வாகனங்களைப் பார்த்தாயா . . .
ரோட்டுக்கும் டயருக்கும்
என்ன முறை
தொடர்பு என்பதை

அவன் :

உன் ரோட்டில் செல்லும்
வாகனத்தைப் பாராதே . . .
எம்போன்ற ஏழைகள்
செருப்பில்லாமல்
நாள்தோறும் நடக்கும்
வெறும் பாதங்களைப் பார்
தார் ரோட்டுக்களில்!

அவள் :

கருமேகம்
வெண்மேகத்தில் மோதுவது
எந்த வகையின்
முறையாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் :

முறைகளை மீறுவது
கறையாக இருந்தாலும்
குறைவில்லா திரைமின்னல்
திருப்தியைத் தருமன்றோ!

அவள் :

கரும் பலகையிலே
வெண்கட்டி முயற்சிக்கு
முற்றுப்புள்ளி வைத்துவிட்டு
கருங்கட்டிகளுக்கு
கருணை தந்தால் போதும்
அப்படித் தானே?

அவன் :

அதன் முகங்களில்
எழுதப்படும்
வெள்ளை எழுத்துக்கள்
விரைந்து அழியும் போது
இதயங்களில் எழுதப்படும்
கருப்பு எழுத்துக்கள்
காணாமல் மறைவது
மிக ஏற்றம் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் :

பியானோவின் சாவிகள்
கருப்பு வெள்ளையாக
இருப்பதனால்தான் கண்ணே
இசையே வருகிறது
தெரிந்து கொள்!

அவள் :

மன்னிக்க வேண்டும்
எனக்கு
இசைக் கோலங்களைவிட
சோக ஓலம் தான்
மிகப் பிடிக்கும்!

அவன் :

இதுவரை உன்முன்
நிறுத்தப் பட்டிருக்கும்
என்னை விடவா?
என்றாலும் ஒன்று பெண்ணே...
இருள் சூழ்ந்து விட்டால்
கருப்பும் ஒன்றுதான்
வெள்ளையும் ஒன்றுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் :

மன்னிக்க வேண்டும்...
நான் எப்போதும்
கருப்பாக இருக்கவே
ஆசைப்படுகிறேன்
ஏனென்றால்...
என் வாழ்க்கை
இருளாக அமைவதை
நான் விரும்பவில்லை!

அவன் :

இறுதியாக
உன்முன் நான்
ஒன்றுமட்டும் கேட்கிறேன்!...
கருப்புடன் கருப்புத்தானே
சேரவேண்டும்?
இதோ பார்...
என் வெள்ளை இதயம்
உன் இதயமும் அப்படித்தானே ...
கருப்பு என்றால்
திரும்பி விடு!
வெள்ளை என்றால்
விரும்பி விடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றும் இன்றும்

மானிட மனசுகளில் எழுமாற்றுத் தேர்வு ஒன்று இங்கே...தனிமனிதமாக தன் வேதனைகளை பந்தி வைத்துக் கொள்கிறது.

மேதைகளிடமல்ல; பேதைகளிடம்!

அன்று...
சீதைக்காக ராமன்
அம்பெடுத்து வந்தான்
அசோக வனம் நோக்கி
இன்றோ...
என் சீதைக்காக
சில மேதைகள்
வம்பெடுத்து வருகிறார்கள்
என் சோக வனம் நோக்கி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

அமெரிக்கா அப்படி என்ன, இயந்திர பாவனையில் நின்று நிலவி விட்டது...எம்நாட்டு 'கற்பிணி மெஷின்' களின் பயன்பாட்டை விடவா?

அமெரிக்காவில்...
ஒரு நிமிட
கறண் கட்டில்
ஒரு லட்சம்
அறிவாளிகளின் லிஸ்ட்!
சிறி லங்காவில்...
அதே நிமிட
கறண் வரவால்
ஒரு லட்சம்
அகதிகள் வொஸ்ட்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திகனும் நாத்திகனும்

மூளை என்பது நாடு பிடிக்கத்தான் லாயக்கு. வார்த்தைகள் எதைப் பிடிக்கும்?

வாக்குப் போடத் தேவையில்லை; வாசித்துப் பாருங்கள்.

கடற்கரை காற்று வாங்க
கடவுள் காற்றை நம்பாத
நாத்திகன் ஒருவன்
நடந்து சென்றான்

கடற்காற்றை
கர்வமாக மறைக்கும்
கோயில் ஒன்றைக்
கண்ட அவன்
கவலையோடு
அருகில் சென்றான்.

சாமிகளின் படங்களுக்கு பதிலாக
புதிய முகங்கள் அங்கே
மாட்டப்பட்டிருப்பதைக் கண்டு
பூசாரியிடம்
புதிரை உதிர்க்கலானான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசாரியோ...
'இவைதான்
சாமியை வழிபட்டுவிட்டு
கடலுக்குச் சென்று
திரும்பி வந்தவர்களின் படம்!
இப்போதாவது நீ
இறைவன் இருப்பதை
ஒப்புக் கொள்கிறாயா...?'

நாத்திகனின் செவிகளில்
லாவகமாக வீசப்பட்ட
கேள்விக் கணைகள்
சேர்ந்ததோ இல்லையோ
ஆனால்...
பூசாரியின் முகத்தில்தான்
அசடு வழிந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் தெரியுமா?...
நாத்திகன் கேட்டது
இவ்வளவுதான்...
'சாமியை வழிபட்டுவிட்டு
திரும்பியவர்களின் படம்
இவை என்றால்
சாமியை வழிபட்டு விட்டு
திரும்பாதவர்களின்
படங்களை எங்கு
தொங்க விட்டிருக்கிறீர்கள்?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாக்கடையும் சந்தனமும்

சாக்கடையும் சந்தனமும் சண்டையிட்டுக் கொள்ளப் போகின்றன ..

சாக்கடை சந்தனத்தில் கலந்தாலும், சந்தனம் சாக்கடையில் புரண்டாலும் நட்டம் என்னவோ சந்தனத்துக்கே!

சந்தனம் தெரிந்து கொள்ளா விட்டாலும் நாம் இதைப் புரிந்து கொள்வோம்.

**சந்தனம் :**

'அப்பன் பேர் தெரியாத
அயோக்கியக் குழந்தைகளின்
அழுக்கு நீர் தோட்டங்களே!
நீங்களா என்னைப் போய்
யாரென்று கேட்டீர்கள்?

கேளீர்!
அரசிகளின் அரண்மனையில்
மணம்பரப்பும் மல்லிகைகள்
அந்தப்புர அழகிகளின்
அழகுநிறச் சட்டைகள்
யாம்
சந்தனக் கட்டைகள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கடை:

'மன்னித்துவிடு சந்தனமே...
தாங்கள்
பட்டுச் சட்டைகளை
மாட்டிக் கொண்ட காரணத்தால்
இனம் காண்பதில் சில
இடர்பாடுகள் அவ்வளவுதான்!

என்றாலும் நீங்கள்
இனம்கண்டு கொண்டீர்களே
அடையாளம் தெரியாத எமக்கு
அடைமொழிகள் மூலம்!'

சந்தனம்:

'யாரிடம் காட்டுகிறாய் உன்
பாசாங்குத் தனத்தை
நகரத்தின் விழுதுகளான
நரகத்தைச் சுமக்கும்
நீயா
எனைப் போய்
இனம் காண மறுக்கிறாய்?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கடை :

'உண்மைதான் நண்பனே...
ஊரின் மூலையிலே
ஒதுக்குகின்ற குப்பங்கள்தான்
அதே வேளை...
உங்கள் போன்ற கனவான்கள்
ஆக்குகின்ற
காகித தெப்பங்களும்
நாங்கள்தான்!'

சந்தனம் :

'மறுப்பதற்கு இல்லையே
சாக்கடையாய் இருந்தால்
சகித்துத் தானே
ஆக வேண்டும்'

சாக்கடை :

'தோழனுக்கு
அரச மண்டபம் தரும்
தண்டனைகள் மட்டும்தான்
வெண்சாமரம் ஆகும் போலும்!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனம் :

'ம்...என்ன சொன்னாய்?
ஊரே உமிழும்
எச்சில் படிக்கன்களே!
நாங்கள்...
இந்திராவைக் கூட
எரித்து முடித்தவர்கள்'

சாக்கடை :

'எரித்தது நீங்களல்ல
நெருப்பு
அதிலும்
நீங்கள்தான்
நின்று எரிந்தீர்களாமே!'

சந்தனம் :

'அயோக்கிய ராஸ்கோல்
டேய்!...'

சாக்கடை :

'நெருங்கி விடாதே நண்பா...
விழுந்தால்
கரைந்து விடுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வேண்டுதல்

கொலைஞனும்கூட சிலவேளை கலைஞன் வார்த்தைக்கு கௌரவம் தருகிறான்.

எப்போது தெரியுமா? ,..
வார்த்தைகள் வயசுக்கு வரும்போது!

**ஒரு தகப்பன் :**

நீ...
ஆழம் தெரியாமல்
காலைக்கூட அல்ல
கழுத்தையுமா
விட்டு விட்டாய்?...

என் மகளுக்குக் கட்டும்
தாலியைக்கூட நான்
இன்னாட்டில் செய்ய
அனுமதிக்கவில்லை
தெரிந்து கொள்!

புரிகிறதா, இப்போது...
கேவலம்
தமிழ் நாட்டில் பிறந்த
உன்னையா என் மகளைக்
காதலிக்க அனுமதிப்பது?...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நினைத்தால்
உன் தலையைத் திருகி
தலை மன்னாருக்கு
அனுப்பி வைப்பேன்!

கையை வெட்டி
கதிர்காமத்திற்கு
காணிக்கையாக்குவேன்!

உன் காலை முறித்து
களனி ஆற்றுக்குள்
இட்டு வைப்பேன்!

ஒரு இளங்கவிஞன் :
'பெரியவரே...
தயவு செய்து
என் இதயத்தை மட்டும்
உங்கள் வாசலிலேயே
விட்டு வையுங்கள்!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு யுத்த காண்டம்

யுத்தங்கள் என்பது இரத்தம் சிந்துவது தான் என்றல்ல. சிலவேளை சிந்துவதைத் தடுப்பதற்கு எடுக்கும் தற்காப்பு முயற்சிகளும்கூட யுத்த உபாயங்களுக்குள்தான் அடங்கி விடுகிறது.

வரலாற்றுப் பட்டியல் பல யுத்தங்களைக் கண்டிருக்கலாம். இருந்தும் என் இதயத்தில் இருப்பிடம் அமைத்தது இலக்கண யுத்தம்தான். புதுக் கவிதைக்கும் மரபுக் கவிதைக்கும் நடந்தேறிய யுத்தம், அது.

இப்போது அதே இதயத்தில் இருப்பிடத்தைப் பிரித்து விட்டு .., ஒத்தாப்பு இறக்கிக் கொண்டது ஒரு ஓய்வில்லாத தமிழர் யுத்தம்!

எங்கே ... இன்னும் சில விநாடிகளில் யுத்த காண்டத்திற்குள் நுழையப் போகிறீர்கள். பொறுமைக் கவசங்களை மாட்டிக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுத்தது போதும்!

ஒரு சம்பள நாளைப் போல் எல்லா மனங்களிலும் கனத்து நிற்கும் அந்த நாள், ஆம் 1990 ஆகஸ்ட் 6. புலிகளால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம்களுடையது.

வேட்டையாடப்பட்ட மனித உடல்கள் வானம் அழுத கண்ணீர் துளிகளில் இரத்தக் கறைகளை ஒளித்துக் கொண்டதால் ... தேக்க மரக்கட்டைகள் வயல்வெளிகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது; புலிகளிடமிருந்து!

ஏழை மரங்கள் அவை வெட்டப்பட்டிருந்தால் விறகுக்காவது உதவியிருக்கும். அவை சுடப்பட்டவைகளாயிற்றே!

நாங்கள்

கண்ணீரில் குளிப்பாட்டினோம்.

கதறல்களால் 'கபன்' இட்டோம்.

பொறுமை எனும் மலர்பரப்பி இதயங்களுக்குள் அடக்கம் செய்தோம்.

இதோ எங்கள் ஒவ்வொரு மார்புகளிலும் ஒவ்வொரு சமாதிகள்.

சமாதானங்கள் தேவையில்லை.

இனி ...

சமாதிகளே தேவை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலக முதல் நாள்
அது
இடைவேளை நேரம்தான்
மணி அடிக்கவில்லை
வெடிகள் வெடித்தன
நாற்பது 'பொடிகள்'
வயல் வெளிகளில்!

அக்டோபர் புரட்சியில்லை
அது
ஆகஸ்டில் புரட்சி!
எங்கள்
கன்னி முஸ்லிம்களைக்
கற்பழிக்க
அன்னியர் துடித்த நாள்!

ஒரு தவச்சாலை
சவக்காலை ஆனது!
ஆம்...
ஒரு பட்டினப் பள்ளியில்
கர்பலா கண்காட்சி
ஓவியங்கள் என்னவோ
எங்களுடையவைதான்
ஓவியர்கள்தான்?...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ...
மரண விருது வழங்கப்பட்ட
ஓவியங்களே
நீங்கள்
காவியங்களாக
நிலைத்து விட்டீர்களே
ஒரு தேசத்தின்
கண்ணீர்த் துளிகளில்!

இல்லத்தைப் பிரசவிக்கத் துடித்த
எம்மோர் உள்ளத்தில்
சொப்பனங்களைக்கூட
இலையுதிர் காலத்தின்
மரணச் சிறகுகள்
கவர்ந்து சென்று விட்டதே!

சுயநலம் இல்லாத
சுவர்க் கடிகாரங்களே...
நுரையீரல்களுக்காக
நீங்கள்
சுவாசிக்கக் கற்றுக் கொண்டவர்கள்
அதனால்தான் என்னவோ...
மூக்குத் துவாரங்களில் வைத்து
துப்பாக்கிகள் சுடக் கற்றுக் கொண்டது
உங்களிடமிருந்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்து வயல்களில்
தொலைந்த ஒரு வாழ்வை
தேடிப் புறப்பட்ட
நிரந்தரக் கூலிகளே!
நீங்கள்
போலிகளல்ல பேடிகளுமல்ல
கூலிகள்தான் என்பதை
ஒரு மரணத்தில் எமக்கு
ஒலிபரப்பி விட்டீர்களே!

புரிந்து கொண்டோம்
நாங்கள்
தெரிந்தும் கொண்டோம்...
மூட்டைப் பூச்சிகளிடம்
ரத்த தானம்
கேட்ட எங்கள்
முட்டாள் தனத்தை!

தெரிந்து கொண்டோம்
ஒரே வீட்டில்
மூன்று சவங்கள்
தவம் கிடந்த அவலத்தைப்
புரிந்தே கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் இனி போதும்
பசித்தவன் பார்க்கும்
பழங்கணக்கு மாதிரி
சுவாசங்கள் பறிபோகும் போது
எங்கள்
வீர வரலாற்றை மனசுக்குப்
பிச்சை போட்டது
போதும்; இனிப் போதும்!

ஓ...முஸ்லிம்களே
நீங்கள் இனி
மன்னிப்பு மானியம்
அளிப்பதில் அர்த்தமில்லை.
உமைத் தீண்டிய
துப்பாக்கித் துளைகளில்
இன்னும்
நச்சு ரவைகள்
மிச்சம் உள்ளன.

ஏழைப் புறாக்களே...
சமாதானம் சுமந்தது போதும்
இனி உங்கள்
கால் நகங்களில்
மாமிச மச்சங்களை
சுமக்கப் பழகிக் கொள்ளுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு இருக்கட்டும்
இனி நீங்களிடும்
ஒவ்வொரு முட்டையும்
அக்கினி முட்டையல்ல;
அணுகுண்டு முட்டைகள்!

தமிழின் சாசனம்
சங்கப் பலகை என்றால்
பலகையின் வாசகம்
முஸ்லிம் தாகமோ?

நரபலி கேட்கும்
பூதங்கள் கூட
கைவிட்டு விட்டன
அவர்களின்
தவிப்பைக் கண்டு!

ஓ...அரசே...
மின்கம்பங்களில்
நீங்கள்
சிவந்த மையால்
எழுதும் 'அபாயம்'
போர்டுகளை
இனி எங்களூர்
எல்லைப் புறங்களில்
மாற்றிக் கொள்ளுங்கள்;
மாட்டிக் கொள்ளுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரின் தவிப்புக்குக்கூட
தற்கொலைப் பட்டியல்
கணிக்கும் நம் அயல் நாட்டில்
அவசரமாக
அறிவித்துக் கொள்ளுங்கள்...
எங்கள் சடலங்களைப் பார்த்தாவது
தலைவர்களுக்கு
தலையாட்டும் முயற்சியை
அவர்கள்
தலையிடி என்றாவது
வாபஸ் பெறத்தான்
வேண்டுமென்று!

கவிஞர்களே!
போதும் போதும்
இனி நம்
கிறுக்கல்களெல்லாம் போதும்
பேனாக்களை
மூடிவிட்டு
'ஹீரோ'க்களாகுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள்
தலை எழுத்துக்களை மாற்ற
தமிழ் எழுத்துக்களை
இனி
ஆயுத எழுத்துக்களாக
மாற்றிக் கொள்ளுங்கள்!

உணர்ச்சிகளை
ஒத்தி வைத்தது போதும்
இனி
உள்ளங்களை ஒளித்துவிட்டு
புறப்படுங்கள்
புனிதர்களாக
வீர-புருஷர்களாக!

இருக்கும் வரைதானே
நாங்கள் பலிகள்!
எதிரிகள் முன்
புறப்பட்டு விட்டால்...
நாங்கள்தான்
வீர அலிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ கேட்கிறது
காத்தாங்குடியின்
புலம்பல் ஓசை
இதோ கேட்கிறது
எம் அயலவரின்
அழுகுரல்கள்
பொறுத்தது போதும்
ம்...
'அல்லாஹு அக்பர்!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் வெளுக்காத வழக்கு !

கிழக்கில்
ஒரு வழக்கு
வழக்கினிலோ
சில துனக்கு

வழக்காளிகள்
அப்பாவிகள்
எதிராளிகளோ
அப்பப்ப பாவிகள்

வக்கீல்களுக்கு
பணங்கள்
சாட்சிகள்
பிணங்கள்
நீதிபதி
மனங்கள்
தீர்ப்புகளோ
ரணங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை 'மொட்டுக்கள்'

சாதாரண செய்தித் தாள்களை மேயும் விழிகளுக்கு என் தலைப்பை மொழி பெயர்ப்பது மெத்த எளிதாகத் தெரிந்தாலும் அதிலும் என் முடிச்சு இருக்கிறது.

ஈரடி இயல்பு இலக்கை நோக்கி அவை நகருகின்றன' ஆங்கிலத்தில் Mod என்ற கலைப்பதம் உணர்த்துவது இதனைத்தான்...

கவிதைகள் அமைப்பை விடவும் பொருளுக்குக் கூடிய கவனம் செலுத்தும்போது அவ்வாறான கவிதைகளை 'மொட்' என்று இனங்காண்கிறது.

நான் இங்கே 'மொட்டுக்களா'க சில கவிதை மொட்டுக் களையே உங்கள் முன் தீட்டி நிற்கின்றேன்-நீட்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைகூகளும் சென்றியுக்களும்!

ஜப்பானியர்களைப் போலவே மூன்று அடிகளுக்குள் ஒரு வானத்தையே முழம் போட்டுக் காட்டும் இலக்கிய நயம் ஈன்ற கவிதைகள் தான் ஹைகூகளாகும்.

புதுக்கவிதையின் பரிணாமத் தொடர் எந்த இலக்கு மணன்களை இலாவகமாக இடம் பெயர்த்ததோ, அதே போலவே சென்றியுகளும்.

இலக்கண இலக்குமணன்களை அரைவாசியால் இடம் பெயர்த்த ராமர்களே... உங்கள் முன் நான் நிறுத்தியுள்ள சென்றியுகளாகும்.

ஹைகு பிரியர்களே ...

பாலும் தேனும் கலந்து கிடக்கின்றன.

சுவைத்துப் பார்க்காமல் நிச்சயம் பிரித்தறிய மாட் டீர்கள்.

வாக்குச் சாவடிக்குள் விரைந்து சென்றேன்
வாக்காளர்கள் எனக்கே வாக்களித்தனர்
ஓட்டைப் போட்டனர் யாருக்கோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பிரஜைகளே இல்லை
இல்லாமல் ஒழித்துவிட்டனர் இராணுவத்தினர்
கண்விழித்தால் ஊரடங்குச் சட்டம்!

என் நிழல்
என்னைப் பார்த்துக் கேட்டது
'என்னைவிட அழகா நீ?'

கிழக்கைவிட்டு வந்திடாதே
வசதியற்ற அகதிகளே!
உங்களுக்காக வடக்குகள்

"பாம்பும் கீரியும்
பூவும் வண்டும்
நோயும் பருந்தாம்!"

கல்யாணப் பந்தலில் மணமகன்
மணமகளை வெகுவாகத் தேடிக்
கொண்டிருக்கிறான்
தாலியை மறந்துபோய் வந்துவிட்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுச்சாமம்
குளிர் இரவு
ஐயோ...என் கட்டில் மெத்தை

பிச்சைக்கு வந்த பிச்சைக்காரன்
பிச்சை வாங்க மறந்து விட்டான்
எதிரே நின்ற எளிய பணக்காரனிடம்!

"எதற்கும் நாங்கள் தயார்
படைகள் யாவும் உசார் நிலையில்
வைக்கப்பட்டுள்ளது"
தலைவர்-கும்பகர்ணன்!

"நவாஸ்! உடனே புறப்பட்டு வரவும்
உன் பழைய காதலி, இதய வலியால்
இறந்து விட்டாள்"
நம்ப முடியவில்லையே!

வெளியே தொலைந்த பணத்தை இவர்கள்
வீட்டுக்குள் தேடிக் கொள்கிறார்கள்
வெளிச்சம் வெளியே இல்லையாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் கவிஞர்களாம்
வார்த்தைகளை ஊர்வலத்திற்கு அனுப்பி விட்டு
அர்த்தங்களை அனாதையாக்கிக்
கொள்கிறார்கள்!

அந்தரத்தில் இருக்கும் சூரியன்
இல்லறம் நடத்த அழைக்கிறது
இரவுகளில் மட்டும் தாமரையை!

என் பிரசவ வேதனையில்
கணவனின் சோதனை;
குழந்தையைச் சுட்டி!

இது ஒரு அதிசயம் நிறைந்த காலமாகும்
மரியாதை வாரம் கொண்டாடப்படுகிறது
அவமரியாதை வருடம் நடக்கும் போது!

தேர்தல் கூட்டமெங்கும் ஒரே ஜனவெள்ளம்
மேடையில் மட்டும் சில மூத்த முதலைகள்
கல்லை எடுத்தோம் கண்ணீருடன் வேட்பாளர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறை வாசகங்கள்

காலத்தால் அழிக்க முடியாத கலைவடிவங்களுள் கல்லறை வாசகங்களும் ஒன்றுதான்.

வைர வரிகளால் வார்க்கப்பட வேண்டிய கவிதை வரிகள் அவை.

இதோ...எனது புத்தக மயானத்தில் பதினைந்து புதிய கல்லறைகள்

விமர்சன மலர் வளையங்களுடன் விரைந்து வாருங்கள்!

**கடவுளின் கல்லறை!**

'இனி எங்கள் வாழ்த்துக்கள் உனக்கே'

இப்படிக்கு
நாத்திக சங்கம்

**நாத்திகன்**

இப்போதும் உங்கள் இறப்புக்குக் காரணம்
இயற்கை தானே...?

இப்படிக்கு
இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருடன்

இப்போதுதான் இவன் தொழிலுக்கு
வாகான
இருட்டே கிடைத்துள்ளது!

கவிஞன்

இதுவரை எத்தனை கவிதைகள்
எழுதியுள்ளாய்
இருட்டு இல்லாமல்...!

வாசகன்

மன்னிக்க வேண்டும்
இனி வாசிக்க நூலில்லை
முடிந்தால்...
இறை மீட்டிக் கொள்ளுங்கள்!

அரசியல்வாதி

எழுந்து விடாதே!
தேர்தலுக்கு இன்னும்
நாட்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காதலன்**

அன்பான காதலரே...
எங்கள் வாழ்த்துக்களை
எழுத முடியாதுள்ளதடா
ஏனென்றால்
இங்கு நாங்கள்
நிறையப்பேர் இருக்கிறோம்!

**மணமகள்**

உன் தனிமையான முதலிரவில்
ஒரு தாய்மை உருவை
இழந்து விட்டாயடி!

**கோமாளி**

இதுவும் ஒரு கல்லறைதான்!

**விலைமாது**

ஏ...பெண்ணே!
உன் பக்கத்தில் இருப்பது
பெண்ணின் கல்லறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகை

'ஹவுஸ் ஃபுல்!'

ஏழை

எங்கள் அரசுகள் செய்ய முடியாத
ஒரு காரியத்தை
மரணம் எனக்குத் தந்துள்ளது
ஆம்...
எனக்கென ஒரு வீடு
அதுவும் கல்வீடு!

எதிரி

உன்னை வெறுத்தாலும்
உன் கல்லறையை நாங்கள்
நேசிக்கிறோம்!

போராளி

இப்போது யாரைத் தாக்குவதற்காக
இந்த நிரந்தர 'பங்கர்களில்'
மறைந்து கொண்டிருக்கிறார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவுடமை

சோசலிஸப் பிரியர்களே...

நான் இட்டுள்ள தலைப்பை அர்த்தம் காணும் அவசரத்தில் உள்ளே இருப்பவை லெனின்களின் பிம்பங்கள் என்று பிரகடனப்படுத்தி விடாதீர்கள். ஏனென்றால்...நான் உற்பத்தி செய்துள்ள கவிதா பாத்திரங்கள், அக்டோபர் புரட்சியால் தரப்பட்டவை அல்ல; இயற்கைப் புணர்ச்சியால் பெறப்பட்டவை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலில் தொடங்கி கல்லறை வழியே

கவிஞன் வாங்கித் தந்த காதல் சுதந்திரம் தான் இந்தப் பொதுவுடமைப் பிரகடனமாகும்.

மாலையில் வாங்கித் தந்ததால் இன்னும் காலையே வெளுக்கவில்லை!

என் கனவுகள் ஊர்வலம் போகின்றன...
என்னை மட்டும்
அனாதையாக்கிவிட்டு
எவரெவரோ உட்கார்ந்த வண்ணம்
என் கனவுகள் ஊர்வலம் போகின்றன...

எவருக்கும் எட்டாத கனிகளெல்லாம்
என் கொட்டாவியில் உதிருமென்றுதான்
காத்திருந்தேன்...உனைப்போல்
கும்பகர்ணன் பாத்திரத்தை
ஒத்திகையில் சரி பார்த்ததனால்
முற்றத்தில் உறங்கிக் கிடக்கிறேன்
உனை நினைத்தபடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டுங்கள் திறக்கப்படும்
கேளுங்கள் கொடுக்கப்படும்
என்றார்கள்
நான் தட்டினேன் உன் இதயக் கதவுகளை
அவை திறக்கப்படவில்லை
நான் கேட்டேன்...வார்த்தை வரங்களை
அவை கொடுக்கப்படவே இல்லை
இனிநான்
எந்த ஏசுபிரானின் வார்த்தைகளுக்கு
மதிப்பளிக்க முடியும்
புரியவில்லை சுவாமிகளே!

ஒரே ஒரு வார்த்தைக்காக நான்
யாசித்தபோது
உன் அகராதி
காலியாய் இருந்தது
இப்போது
நீ வார்த்தை வங்கியாக இருந்தும்
ஒரு வார்த்தையைக் கூட
கடன்தர மறுக்கிறாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ கோயிலில் நுழைந்து
பிரார்த்தனை செய்வது
எனக்காக என்றால்
அது உனக்காகவேதான்!
ஆனால்
நீ கோயிலில் நுழைவது
கடவுளைக் காணவென்றால்
திரும்பிவிடு...
உனக்காகத் திறந்து கிடக்கும்
என் இதயக் கோயில் நோக்கி!

கொடுப்பவர் கொடுத்தால்
வெறும் மரம்கூட
புனித மரமாகுமாம்
போதிமரத்தைப் போல்!
கொடுத்துப்பார் கண்ணே!
உன் வெறும் மனம்கூட
புனித மனமாகலாம்...
புத்தன் போதி மரத்தைப்போல்!

வீட்டுக்கு 'ஏஸி' வைப்பது
காற்று வசதிக்குத்தானே கண்ணே!
ஏஸியாக நான் வந்தும்
ஏசியனுப்புகிறாயே
பேசாமலேயே என்னை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகக் கவிஞன் கை
தொட்டு விட்டால்
விறகுக் கட்டைகூட
வீணையாகி விடுமாம் என்றார்கள்.
நான் தொடும் வீணை கூட
விறகாகி வீணாகிக் கொண்டிருக்கிறதே!

நீ வெறுத்து எழுதிய அந்த
வேதனை மடலை நான்
கண்ணீரில் நனைத்து
பெருமூச்சில் உலர வைத்தேன்
இன்னும்
அந்த வைர வரிகள்
புதுப் பொலிவுடனேயே
என்மீது
எச்சரித்து நிற்கின்றன;
உன் பெயரை
உச்சரித்து நிற்கின்றன!

முகாரி ராகத்துக்கு
முட்டுக்கட்டை போட்டு விட்டு
கல்யாணி ராகத்தை
வாசித்தால் என்னவாம் என்று
கேட்டுவரப் புறப்பட்ட என்னை
நினைவுகளால் தடுத்து நிறுத்தினாய்
'என் தந்தை பாகவதர்' என்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றோ...
கோவலன் மதுரையில் மாண்டான்
எரிந்தது மதுரையே
இன்றோ...இக்கோவலன்
உன் மனதினில் மாண்டிருக்கிறான்
அதனால்தானோ
உன் மனதையே எரித்துக் கொள்கிறாய்
எனையும் சேர்த்து!

நீ மௌனங்களுடன்
கை குலுக்கத் தொடங்கிய போது
விழிகளை ஏமாற்றி விட்டு
கண்ணீர்த் துளிகள்
கன்னங்களில் அல்லவா
கரைந்து கலந்தன!

ஒரு மகா கவிஞனை
மன வேதனைக்குள்ளாக்கிய உண்மையை
இலக்கிய உலகம் அறிந்தால்
நீ நிச்சயம்
தப்பிவிட முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஜாக்கிரதையாக இருக்கிறேன்
வராத மழைக்காக
வார்த்தைகளை செலவழிக்கின்ற
வானிலை அறிவிப்பாக மட்டும்
என் கவிதைகள்
குன்றிவிடக் கூடாதென்பதில்
நான் ஜாக்கிரதையாக ...

பெண்ணே ...
நீயென்ன தெரிவு செய்யப்படாத
தேசீயப் பட்டியலா?
ஓட்டுக்கள் இல்லாமலே என்னை
சீட்டுகளில் அமர்த்தி விடுகிறாய்!

கனவுகளைக்கூட நான் சேமித்து வைத்தேன்
கஞ்சனைப் போல
காலப் போக்கில்
கனவுகளே என்னை
கடன் வாங்கிக் கொண்டன
கண்ணே ... உன்பெயரைச் சொல்லி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மறந்து விடுவதற்காக
ஒரு நிமிட ஒத்திகை பார்த்தேன்
ஒரே நிமிட ஒத்திகைக்குள்...
ஒரு வாரம் பூரா
உன்னையே மணந்து விட்டேன்!

கனவுகளில் நீ வந்து
தொல்லைதரக் கூடாதென்பதற்காக
என் இமைகளையே
பிதுக்கி இருந்தேன்
அப்போது...
ஊரார் அடிக்கும் நக்கல் ஒலிகளில்
உன் ஒலிதானே முந்திக் கொள்கிறது!
இப்போது
பிதுங்கிய விழிகளில்
பிடுங்கிய மயிர்களை பசையுடன்
மீண்டும் கனவுகளில் நீ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகம்புல் வளர்ப்பிலும்
விரும்பாது வளருமொரு
ரோஜா மலர் இங்கே
களையென்றே கருதுமெங்கள்
விவசாயக் கோட்பாடும்...
தானிய மணிகள் மத்தியில் நான்
தங்கமணி மாதிரி
தனியாக இருப்பதனால்
நானுமிங்கே
கலப்பென்றார்
நாள்தோறும்
காதல் சட்டை மாற்றும்
சாரைப் பாம்புக் காதலர்கள்
மத்தியில் நான்
நாகப் பாம்பாக நடந்து செல்லப் பார்ப்பது
நடிப்பாகத்தான் தெரியும் கண்ணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிப் பணத்தின்
சில்லறை ஒலிகளிலும்
கல்லடுக்கு மாளிகையின்
கார் ஓசைகளிலும்
காணாமல் போகும் எம்
காளையர் மத்தியில் நான் ...
ஒரு நல்ல இதயத்துக்காக
இலவசமாக அலைந்து திரிவது
எதிரினில் நிற்கும் உனக்கும்
எளிதாகத்தான் தெரியும் பெண்ணே!

திறந்த எனது உள்ளமே இன்று
திருட்டுப் போனதை
நான் யாரிடம் சென்று
முறையிடுவேன் கண்ணே!
எப்போதாவது ஒரு நாள்
நான் இல்லாத சேதிவரும்
அப்போது ...
காருண்ய மன நினைப்போடு
கண்ணீர் துடைக்க கைக்குட்டையோடு
விரைந்து வா ...
என் கல்லறைக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பர ஓவியங்கள்

கண்காட்சி நடப்பது பொது இடங்களில்தானே? அப்படியென்றால்...அது தொடர்ந்து நடக்கட்டும்!

நீங்கள்
ஓவியங்கள் பார்க்க
சீகிரியா செல்வதேனோ...
வாருங்கள் ஒருமுறை
எங்கள் ஊர்
பொது மலசல கூடத்திற்கு!
சிறுவர்கள் தீட்டிய
சிறுநீர் ஓவியம் வேண்டுமா?
வளர்ந்தோர் வரைந்த
வைர நிற ஓவியம் வேண்டுமா
எதுவென்றாலும்...
எங்களூர்
பொதுச் சுவர்களில்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைச் சோலை

ஆம்...இங்கு இதைவிட பொதுவுடமைகள் இருக்கிறதா...? இருந்தால் சொல்லுங்கள்.

நடிகை இல்லாமல்!

அரிதாரம் பூசப்பட்ட
மனித மலர்கள்
இதழ்களில்
'லிப்ஸ்டிக்' பனித்துளிகள்
மொய்ப்பவைகளோ
'காமெரா' வண்டுகள்
தேனுக்கு பதிலாக
முத்தத் துளிகள்!
'சூட்டிங்' தென்றல்
வீசும் போது
நடிகை மரங்கள்
அசைந்து கொள்ளும்
பூப்பறிப்பதற்கு...தடை இங்கே
பார்ப்பதற்கு மட்டும்
'பாஸ்' உண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ லவ் யூ!

வாலிப வயசுகளின் மனன பாஷை இது. வார்த்தை வங்கிகளின் பொதுவுடமைதான்.

எங்கே...!

எனைப் பார்த்து ஒரு முறை ...

பழம் நழுவி பாலிலும்
பால் நழுவித் தேனிலும்
தேன் நழுவி நாவிலும் விழ ...
அந்த நாவே நழுவி
என் காதில் விழுந்ததே
ஆம் ...
ஐ லவ் யூ!

NP 2339



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹவுஸ் ஃபுல்

என் வாசகசாலை இந்த ஒரு நிமிடத்துடன் ஹவுஸ் ஃபுல்

ஏனென்றால் ...

வயது வந்தவர்களைவிட வயசுக்கு வராதவர்கள் அதிகம்-உள்ளே இருப்பவர்களில்

கரண்ட் வந்தது
கைக்கரகோஷம்
கொட்டகை எங்கும்
கதவுகள் யாவும்
அடைபட்டு விட்டன ...
'ஹவுஸ் ஃபுல்' என்று
வெளியே போஸ்டர்
அனாதையாகத் தொங்கிக் கொண்டு
சொன்னது
வயது வந்தவர்களுக்கு மட்டும்!

பொது நூலகம்
20 MAY 1992
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITHDRAWN
PUBLIC LIBRARY
COLOMBO
DATE. 20/./2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org